24.07.2017

தினமணி

**விலையேற்றத்தால் வந்த விபரீதம்: தக்காளி ஏற்றி வந்த லாரிக்கு ஆயுதம் தாங்கிய பாதுகாப்பு**



போபால்: கிலோ 100 ரூபாய் என்ற அளவுக்கு விற்கப்படும் தக்காளியை பாதுகாக்க வேறு வழியில்லாமல், இந்தூர் காய்கறி அங்காடியில் ஆயுதம் தாங்கிய பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

இந்தூர் சந்தைக்கு வந்த ஒரு வாகனத்துக்கு 6க்கும் மேற்பட்ட ஆயுதம் தாங்கிய பாதுகாவலர்கள் உடன் வந்தனர். அந்த வாகனத்தில் விலை உயர்ந்த தங்க நகைகளோ, எலக்ட்ரானிக் பொருட்களோ இல்லை.. அதில் இருந்தது விலை உயர்ந்த தக்காளி.

தக்காளி விலை உயர்ந்திருப்பதால் அதனை கொள்ளையடிக்கும் நடவடிக்கைகளில் மக்கள் ஈடுபடலாம் என்ற அச்சத்தில்தான் இந்த பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

சில மாதங்களுக்கு முன்பு, மத்தியப் பிரதேசத்தில் தக்காளி உற்பத்தி அதிகரித்ததால், ஒரு கிலோ தக்காளி ரூ.1க்கும் குறைவாக விற்கப்பட்டதால், அதிருப்தி அடைந்த விவசாயிகள் தக்காளியை சாலையில் கொட்டிப் போராடினர். ஆனால் அதே தக்காளி இன்று மிக விலை உயர்ந்த காய்கறி என்ற இடத்தைப் பிடித்து ஆயுதம் தாங்கிய பாதுகாவலர்களுடன் வாகனத்தில் கொண்டு வரும் நிலை ஏற்பட்டுள்ளது.

தக்காளிக்கு திடீரென ஏற்பட்ட பற்றாக்குறையால் ஒரு கிலோ தக்காளி விலை ரூ.100ஐ தொட்டது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கொச்சியில் இருந்து சரக்குரெயிலில் 1,300 டன் உரம் தஞ்சைக்கு வந்தது**

---




கொச்சியில் இருந்து சரக்குரெயிலில் 1,300 டன் உரம் தஞ்சைக்கு வந்தது.

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெற்று வருகிறது.

கடந்த ஆண்டு காவிரி ஆற்றில் போதிய அளவு தண்ணீர் வராததால் குறுவை, சம்பா, தாளடி நெற்பயிர்கள் கருகின. ஆழ்துளை கிணறு மூலம் மட்டும் நெல் சாகுபடி நடைபெற்றது.

இந்த ஆண்டும் மேட்டூர் அணையில் போதிய அளவு தண்ணீர் இல்லாததால் தற்போது தஞ்சை மாவட்டத்தில் ஆழ்துளை கிணற்றை நம்பியே குறுவை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மேலும் உளுந்து போன்ற பயறு வகை பயிர்களும் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இதற்கு தேவையான உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள், தனியார் உர விற்பனை நிலையங்கள் மூலம் வினியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

இதற்காக வெளிமாநிலத்தில் இருந்து உரம் வரவழைக்கப்படுவது வழக்கம். இந்தநிலையில் கேரள மாநிலம் கொச்சியில் இருந்து சரக்குரெயிலில் 20 வேகன்களில் 1,300 டன் காம்ப்ளக்ஸ் உரம் தஞ்சை ரெயில் நிலையத்திற்கு நேற்று கொண்டு வரப்பட்டது. இந்த உர மூட்டைகள் தஞ்சை ரெயில் நிலையத்தில் இருந்து லாரிகளில் தஞ்சை, நாகை, திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு விற்பனைக்காக கொண்டு செல்லப்பட்டன.

தினகரன்

**மூட்டுவலியை போக்கும் கல்யாண முருங்கை**



நமக்கு அருகில், எளிதில் கிடைக்கும் மூலிகைகள், இல்லத்தில் அஞ்சறைப்பெட்டியில் உள்ள உணவுப் பொருட்களை கொண்டு பாதுகாப்பான பக்கவிளைவில்லாத எளிய மருத்துவத்தை பார்த்து வருகிறோம். அந்தவகையில், காய்ச்சலை தணிக்க கூடியதும், மூட்டுவலியை போக்கவல்லதும், பித்தத்தை சமன்படுத்தும் தன்மை கொண்டதும், மாதவிலக்கை தூண்ட கூடியதுமான கல்யாண முருங்கையின் நன்மைகள் குறித்து நலம் தரும் நாட்டு மருத்துவத்தில் காணலாம்.சாலையோரங்களில், இல்லத்தில் இருக்கும் மூலிகை கல்யாண முருங்கை. பல்வேறு மருத்துவ குணங்களை கொண்ட இதற்கு முள் முருங்கை என்ற பெயரும் உண்டு. இது, மாதவிலக்கை தூண்ட கூடியது. இளம் தாய்மார்களுக்கு பால்பெருக்கியாக விளங்குகிறது. சிறுநீர் பெருக்கியாக விளங்கும் கல்யாண முருங்கை மலச்சிக்கலை போக்குகிறது. உடலில் பித்தம் அதிகமாவதை தடுக்கிறது. பித்தத்தை சமன்படுத்துகிறது.

கல்யாண முருங்கை மரப்பட்டையை பயன்படுத்தி காய்ச்சல், மூட்டுவலியை சரிசெய்யும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: கல்யாண முருங்கை மரப்பட்டை, சீரகம், மிளகு. செய்முறை: கல்யாண முருங்கையின் மரப்பட்டை துண்டுகளை நசுக்கி எடுக்கவும். இதனுடன் சீரகம், மிளகு தட்டிப்போடவும். ஒரு டம்ளர் அளவுக்கு நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி காலை, மாலை வேளைகளில், 50 மில்லி அளவுக்கு குடித்துவர உடலில் ஏற்படும் வலியை போக்கும். காய்ச்சலை தணிக்கிறது. மூட்டுகளில் ஏற்படும் வலியை போக்குகிறது. வலி நிவாரணியாக பயன்படுகிறது. வீக்கத்தை வற்ற செய்கிறது. வாதத்தை அடக்க கூடியதாக விளங்குகிறது.

கல்யாண முருங்கை இலைகளை பயன்படுத்தி உடல் எடையை குறைக்கும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: கல்யாண முருங்கை இலை, சீரகம், மரமஞ்சள்.செய்முறை: கல்யாண முருங்கை இலைகளை பசையாக அரைத்து ஒரு பெரிய நெல்லிக்காய் அளவு எடுக்கவும். இதில், 20 மிளகு தட்டிபோடவும். சிறிது சீரகம், அரை ஸ்பூன் மரமஞ்சள் பொடி சேர்த்து ஒரு

டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி தினமும் காலை 100 மில்லி அளவுக்கு குடித்துவர மாதவிலக்கை தூண்டும். உடல் எடை குறையும். வயிற்றில் உள்ள பூச்சிக்களை வெளியேற்றும். மாதவிலக்கு முன்பு ஏற்படும் பிரச்னைகளை தீர்க்கும் மருந்தாகிறது. கல்யாண முருங்கை இலையை பயன்படுத்தி வலி நிவாரணி தைலம் தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: கல்யாண முருங்கை இலைகள், நல்லெண்ணெய், எலுமிச்சை. செய்முறை: ஒரு பாத்திரத்தில் சிறிது நல்லெண்ணெய் எடுக்கவும். இதனுடன் கல்யாண முருங்கை இலை பசை, சிறிது எழுமிச்சை சாறு சேர்த்து தைலப்பதத்தில் காய்ச்சவும். இதை வடித்து வைத்துக்கொண்டு மேல்பூச்சு மருந்தாக பயன்படுத்தி வர வீக்கத்தை கரைக்கும். வலியை தணிக்கும்.ஆழ்ந்த தூக்கத்துக்கான மருத்துவம் குறித்து பார்க்கலாம். நாட்டு மருந்து கடைகளில் விற்கப்படும் சாதிக்காயை பொடித்து அரை ஸ்பூன் எடுக்கவும். இதை நீரில் இட்டு காய்ச்சி, தேன் அல்லது நாட்டு சர்க்கரையை சேர்த்து குடித்துவர தூக்கம் நன்றாக வரும். தூக்கமின்மை சரியாகும்.

**குதிகால் வெடிப்பை குணப்படுத்தும் வேப்பிலை**



நமக்கு அருகில், எளிதில் கிடைக்கும் மூலிகைகள், இல்லத்தில் அஞ்சறை பெட்டியில் உள்ள உணவுப்பொருட்களை கொண்டு பாதுகாப்பான பக்கவிளைவில்லாத பயனுள்ள எளிய மருத்துவத்தை பார்த்து வருகிறோம். அந்தவகையில், குதிகால் வெடிப்பை குணமாக்கும் மருத்துவம் குறித்து பார்க்கலாம். குதிகால் வெடிப்பால், அதில் மண் புகுந்து துன்புறுத்தும். கிருமிகள் ஊடுருவி தோல்நோயாக மாறும். விரல் இடுக்குகளில் அரிப்பு ஏற்பட்டு புண்

உண்டாகும். காலில் ஏற்படும் வெடிப்பு, விரல் இடுக்கு, பாதங்களில் உண்டாகும் தோல் நோய்களை குணப்படுத்தும் மருந்துகளை செய்முறையில் காணலாம்.

மாம்பருப்பை பயன்படுத்தி குதிகால் வெடிப்புக்கான மேல்பூச்சு மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: மாம்பருப்பு, விளக்கெண்ணெய். செய்முறை: ஒரு பாத்திரத்தில் சிறிது விளக்கெண்ணெய் எடுக்கவும். அரைத்து வைத்திருக்கும் மாம்பருப்பு சேர்த்து தைலப்பதத்தில் காய்ச்சவும். இதை வடிகட்டி ஆறவைத்து பூசிவர குதிகால், உள்ளங்கால் மற்றும் கைகளில் ஏற்படும் வெடிப்பு சரியாகும். பூஞ்சை காளான்களால் ஏற்படும் தோல் வெடிப்பு, விரல் இடுக்குகளில் உண்டாகும் அரிப்பு குணமாகும். மாங்கொட்டை வயிற்றுப்போக்குக்கு மருந்தாகிறது. மாங்கொட்டையில் பாதி அளவு எடுத்து நெருப்பில் சுட்டு சாப்பிடும்போது கழிச்சல் பிரச்னை தீரும். மாங்கொட்டை ரத்தத்தை உறையவைக்கும் தன்மை உடையது.

வேப்பிலையை பயன்படுத்தி குதிகால் வெடிப்புக்கான மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: வேப்பிலை, மஞ்சள் பொடி, விளக்கெண்ணெய். செய்முறை: வேப்பிலையை அரைத்து எடுக்கவும். இதனுடன் சிறிது மஞ்சள் பொடி, விளக்கெண்ணெய் சேர்த்து கலந்து, வெடிப்பு உள்ள இடத்தில் தினமும் பூசிவர குதிகால் வெடிப்பு சரியாகும். பூஞ்சை காளான்களால் ஏற்படும் கால் வெடிப்பு, விரல் இடுக்குகளில் அரிப்பு, நகச்சொத்தை ஆகியவை குணமாகும்.

பல்வேறு மருத்துவ குணங்களை கொண்ட வேம்பு, மஞ்சள் சேரும்போது பல்வேறு நோய்களுக்கு மருந்தாகிறது. மஞ்சள், வேம்பு ஆகியவற்றை நீரில் போட்டு சிறிது நேரம் வெயிலில் வைத்து குளிப்பதால், அம்மைநோய் விலகிப்போகும். அம்மை கொப்புளங்கள் ஆறிப்போகும். அம்மையால் உண்டான வடுக்கள் மறையும்.சோற்றுக் கற்றாழையை பயன்படுத்தி பாத வெடிப்பை போக்கும் மேல்பூச்சு மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: சோற்றுக்கற்றாழை, தேங்காய் எண்ணெய், மஞ்சள் பொடி.

செய்முறை: ஒரு பாத்திரத்தில், சோற்றுக் கற்றாழையின் சதை பகுதியை எடுக்கவும். இதனுடன் தேங்காய் எண்ணெய் சேர்த்து தைலப்பதத்தில் காய்ச்சவும். பின்னர் மஞ்சள் பொடி சேர்த்து கலந்து பூசிவர பாதவெடிப்பு, சேற்றுப்புண் சரியாகும். பாதவெடிப்பை பித்த வெடிப்பு என்றும் சொல்வதுண்டு. பாத வெடிப்புக்கு இந்த தைலம் அற்புதமான மருந்தாக விளங்குகிறது.ஆசனவாய் கடுப்பை சரிசெய்யும் மருத்துவம் குறித்து பார்க்கலாம். சாலையோரங்களில் பார்க்க கூடிய மஞ்சள் நிற பூக்களை உடைய துத்தி செடியின் இலைகளை சுத்தம் செய்து எடுக்கவும். இதனுடன் பாசிப்பயிறு சேர்த்து கீரையாக கடைந்து சாப்பிட்டுவர ஆசனவாய் கடுப்பு இல்லாமல் போகும்.

**கண்நோயை குணப்படுத்தும் நந்தியாவட்டை**



நமக்கு அருகில், எளிதில் கிடைக்கும் மூலிகைகள், இல்லத்தில் அஞ்சறை பெட்டியில் உள்ள உணவுப்பொருட்களை கொண்டு பாதுகாப்பான பக்கவிளைவில்லாத பயனுள்ள எளிய மருத்துவத்தை பார்த்து வருகிறோம். அந்தவகையில், கண்நோய்களை சரிசெய்ய கூடியதும், உயர் ரத்த அழுத்தத்தை குறைக்கவல்லதும், புண்களை ஆற்ற கூடியதுமான நந்தியாவட்டையின் நன்மைகள் குறித்து நலம் தரும் நாட்டு மருத்துவத்தில் காணலாம்.

நந்தியாவட்டை அடுக்கான மலர்களை உடையது. வெள்ளை நிறப்பூக்களை

உடைய இது கண்நோய்க்கு மருந்தாகிறது. பூக்கள் கண் எரிச்சலை, கண் சிவந்த நிலையை போக்குகிறது. பற்களை பலப்படுத்தும். நுண்கிருமிகளை அழிக்க கூடியது. வயிற்று பூச்சிகளை வெளித்தள்ளும். நந்தியாவட்டை பூக்களை பயன்படுத்தி கண்நோய்களுக்கான மருந்து தயாரிக்கலாம்.

தேவையான பொருட்கள்: நந்தியாவட்டை பூக்கள், நல்லெண்ணெய். செய்முறை: நந்தியாவட்டை பூக்களின் இதழ்களை நீர்விடாமல் அரைத்து எடுக்கவும். இதனுடன் நல்லெண்ணெய் விட்டு தைலமாக காய்ச்சி வடிகட்டி ஆறவைத்து எடுக்கவும். இதை வடிகட்டி கண்களை சுற்றியுள்ள கருவளையம் மீது பூசும்போது கருவளையம் இல்லாமல் போகும். நந்தியாவட்டை பூக்கள் மெழுகை போன்றது. மேல்பற்றாக போடும்போது பூஞ்சைக் காளான்களை போக்கும்.

இந்த பூ குளிர்ச்சி தரக்கூடியது என்பதால், கண்களில் மேல் வைத்திருப்பதாலோ அல்லது தண்ணீரில் பூவை ஊறவைத்து, அந்த நீரை கொண்டு கண்களை கழுவுவதாலோ கண் எரிச்சல் சரியாகும். பார்வை தெளிவுபெறும். நந்தியாவட்டை பூக்களை சுத்தம் செய்து கசக்கி ஓரிரு சொட்டுகள் கண்ணில் விடுவதால் கண்படலம் சரியாகும்.

நந்தியாவட்டை இலைகளை பயன்படுத்தி உயர் ரத்த அழுத்தத்தை குறைக்கும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: நந்தியாவட்டை இலைகள், மிளகு, சீரகம்.செய்முறை: ஒரு பாத்திரத்தில், நந்தியாவட்டை இலைகள் 5 எடுத்து துண்டுகளாக்கி போடவும். இதனுடன் 10 மிளகு, சிறிது சீரகம் சேர்த்து தட்டி போடவும். ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி தினமும் காலையில், குடித்துவர உயர் ரத்த அழுத்தத்தை குறைக்கும். இது, வலி நிவாரணியாக விளங்குகிறது. வாய்கொப்பளித்து வர பல் வலி குணமாகும்.

நந்தியாவட்டை இலைகளை பயன்படுத்தி புண்களை ஆற்றும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: நந்தியாவட்டை இலை, தேங்காய்

எண்ணெய். செய்முறை: ஒரு பாத்திரத்தில் சிறிது தேங்காய் எண்ணெய் எடுக்கவும். இதில், நந்தியாவட்டை இலைகளை நீர்விடாமல் அரைத்து சேர்த்து தைலப்பதத்தில் காய்ச்சி ஆறவைத்து எடுத்துக்கொள்ள வேண்டும். இதை மேல்பூச்சாக பயன்படுத்திவர வெட்டுக்காயம், சிராய்ப்பு காயம், ஆறாத புண்கள் ஆறும்.

அடிக்கடி ஏற்படும் வாந்தியை கட்டுப்படுத்தும் மருத்துவம் குறித்து பார்க்கலாம். நாட்டு மருந்துக்கடைகளில் கிடைக்கும் சதக்குப்பை என்ற மூலிகையை வாங்கி, ஒரு ஸ்பூன் நீரில் இட்டு கொதிக்க வைக்கவும். இதனுடன் தேன் சேர்த்து குடித்துவர உடலில் உள்ள உஷ்ணம், பித்தம் வெளியேறும். அடிக்கடி ஏற்படும் வாந்தி பிரச்னை சரியாகும்.